உ

ஓம் நமச்சிவாய

# அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்

# பேரூர்

## நித்தியப்படி பூஜைக்கு தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை சப்ளை செய்தல்

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

### பசலி 1432

இத்திருக்கோயிலின் நித்தியப்படி பூஜை மற்றும் குறிப்பிட்ட அபிஷேகம் சாமான்களை கோவை கூட்டுறவு பண்டக சாலையிலிருந்து கொள்முதல் செய்து இருப்பில் கணக்கு வைக்க முடியாத கீழ்க்கண்ட பொருட்களை பசலி 1432–க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் சப்ளை செய்ய 26.05.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 4.30 மணிக்கு மேற்படி திருக்கோயில் அலுவலகத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ. எண் | சாமான்கள் விபரம் | ஆண்டு 1–க்கு சப்ளை செய்ய வேண்டிய தோராயமான அளவு | ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1. | தேங்காய் (சுற்றளவு 30 செ.மீ) | 1000 எண்ணம் | 500.00 |
| 2. | வாழைப்பழம் | 2500 எண்ணம் | |
| 3. | வெற்றிலை (100 வண்ணம் கொண்ட கௌலி) | 20000 எண்ணம் | |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பில் இந்து சமயத்தினர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

2. இத்திருக்கோயிலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர்களும், திருக்கோயிலினால் வழக்கு தொடுக்கப்பட்டவர்களும், நிலுவை தொகை செலுத்த வேண்டியவர்களும், கோயிலின் நன்மைக்கு முரணாக செயல்பட்டவர்களும், வேறு திருக்கோயில்களில் நிலுவை தொகை செலுத்த வேண்டியவர்களும் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த விசயத்தில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.

3. நீதிமன்றத்தில் நொடித்த நிலை (Insolvency) அடைந்தவர் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளவர்கள் மற்றும் அரசாங்கத்தாலோ, நீதிமன்றத்தாலோ சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டவர்கள் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிவுற்றதும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் தமது சொந்த செலவில் ரூ. 20/– முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி திறப்பு காரணம் கூறாமல் எந்த கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது ஏலத்தை ஒத்தி வைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

6. ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளும் நபர்கள் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ. 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலை "உதவி ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், கோவை – 10". ("Assistant Commissioner / Executive Officer, Arulmigu Patteeswaraswamy Thirukovil, Perur, Coimbatore - 10") என்ற முகவரிக்கு கோவையில் மாற்றத்தக்க வகையில் பொதுகூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட அரசு வங்கிகளில் வரைவோலை அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும். வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும்.

7. ஒவ்வொரு இனத்திற்கும் துல்லியமாக தொகை குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட வேண்டும்.

...2...

8. ஒப்பந்தப்புள்ளி மேல் உறையில் அச்சிடும் நிறுவனத்தின் முழுவிலாசம் குறிப்பிட வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி படிவம் திருக்கோயில் அலுவலகத்தில் ரூ. 50/– செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

10. ஒப்பந்தப்படிவம் 13.05.2022 முதல் 26.05.2022 அன்று பிற்பகல் 2.00 மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

11. மேற்கண்ட சாமான்கள் அனைத்தும் திருக்கோயில் நிர்வாகத்திலிருந்து வழங்கப்படும் இண்டென்ட்படி அவ்வபோது கேட்கப்படும் நேரத்தில் திருக்கோயிலுக்கு கொண்டு வந்து சப்ளை செய்ய வேண்டும்.

12. அனைத்து பொருட்களும் நல்ல சுகாதாரமான முறையில் அவ்வப்பொழுது தேவைப்படும் பூஜைக்கேற்ப சப்ளை செய்ய வேண்டும்.

13. ஆண்டு முழுவதும் தோராயமாக சப்ளை செய்ய வேண்டிய அளவு குறிப்பிட்டுள்ள தேவைக்கேற்ப கூட்டவோ குறைக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

14. தினந்தோறும் சப்ளை செய்ய வேண்டிய பூஜைப் பொருட்கள் மற்றும் அளவுகளை முதல் நாள் மாலை திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

15. ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரர்தாரர்கள் உரிய ஒப்பந்தப்படிவ கட்டண ரசீது இணைத்தும் முன்வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைத்தும் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட வேண்டும்.

16. குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரப்படும் ஒப்பந்தப்புள்ளி, கையொப்பம் இடப்படாத ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

17. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் உறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையை தவிர மற்ற ஒப்பந்ததாரர்கள் தொகை ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிந்தவுடன் வங்கி காசோலை மூலம் திருப்பித்தரப்படும். உறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் முன்வைப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி காலம் முடிவு பெற்று தணிக்கை முடிந்த பின்பு தான் திரும்ப வழங்கப்படும்.

18. மேலே கண்ட பூஜைப் பொருட்கள் சுகாதராமான முறையில் இல்லாமல் குறைவு ஏற்பட்டால், அதன் முழுப்பொறுப்பும் டெண்டர்தாரரையே சாரும்.

19. திருக்கோயிலில் அவ்வப்பொழுது சொல்லும் அளவு ஒப்பந்ததாரர்கள் முன்கூட்டியே தெரிந்து கொண்டு சப்ளை செய்ய வேண்டும்.

20. வாழைப்பழம் சப்ளை செய்பவர்கள் பூஜைக்குரிய நல்ல தரமான பழங்களை அவ்வப்போது முன்கூட்டியே உள்ள அளவுகளைத் தெரிந்து கொண்டு சப்ளை செய்ய வேண்டும்.

21. வெற்றிலை சப்ளை செய்பவர்கள் தினந்தோறும் அவ்வப்போது முன்கூட்டியே உள்ள அளவுகளைத் தெரிந்து கொண்டு சப்ளை செய்ய வேண்டும்.

22. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ந.க.எண். 765/2017/இசட் 1/ நாள் 17.03.2017–ன் குறிப்பில் அறிவுறுத்தப்பட்ட ஆலோசனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் பின்பற்ற வேண்டும்.

23. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் தங்களது ஆதார், பான் கார்டு மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் வழங்க வேண்டும்.

24. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அரசு விடுமுறை அல்லாத நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

திருமதி. செ.வ.ஹர்சினி,பி.எஸ்.சி,பி.எல்.,
தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
மருதமலை

திருமதி. கா.விமலா, எம்.ஏ,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
Website: hrce.tn.gov.in
Email : aceocbe_9760.hrce@tn.gov.in
தொலைபேசி எண் : 0422–2607991

இடம் : பேரூர்
நாள் : 12.05.2022

உ

ஓம் நமச்சிவாய

# அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில்
# பேரூர்

**திருக்கோயில் கால்நடைகள் மற்றும் யானைக்கு பசுந்தீவனம் சப்ளை செய்தல்**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
**பசலி 1432**

இத்திருக்கோயிலின் கால்நடைகள் மற்றும் யானைக்கு தினந்தோறும் தேவையான அளவிற்கு பசுந்தீவனங்கள் சப்ளை செய்தல் உரிமத்திற்கு பசலி 1432–க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் சப்ளை செய்ய 26.05.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 4.30 மணிக்கு மேற்படி திருக்கோயில் அலுவலகத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி திறப்பில் இந்து சமயத்தினர் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

2. இத்திருக்கோயிலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவர்களும், திருக்கோயிலினால் வழக்கு தொடுக்கப்பட்டவர்களும், நிலுவைத் தொகை செலுத்த வேண்டியவர்களும், கோயிலின் நன்மைக்கு முரணாக செயல்பட்டவர்களும், வேறு திருக்கோயில்களில் நிலுவைத் தொகை செலுத்த வேண்டியவர்களும் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த விசயத்தில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.

3. நீதிமன்றத்தில் நொடிப்பு நிலை (Insolvency) அடைந்தவர் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளவர்கள் மற்றும் அரசாங்கத்தாலோ, நீதிமன்றத்தாலோ சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டவர்கள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4. ஒப்பந்தப்புள்ளி திறப்பு முடிவுற்றதும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் தமது சொந்த செலவில் ரூ. 20/– முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி திறப்பு காரணம் கூறாமல் எந்த கேள்வியையும் நிராகரிக்கவோ அல்லது ஏலத்தை ஒத்தி வைக்கவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

6. ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளும் நபர்கள் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ. 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலை "உதவி ஆணையர்/ செயல் அலுவலர், அருள்மிகு பட்டீசுவரசுவாமி திருக்கோயில், பேரூர், கோவை – 10". ("Assistant Commissioner / Executive Officer, Arulmigu Patteeswaraswamy Thirukovil, Perur, Coimbatore - 10") என்ற முகவரிக்கு கோவையில் மாற்றத்தக்க வகையில் பொதுகூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட அரசு வங்கிகளின் வரைவோலையாக செலுத்த வேண்டும். வங்கி வரைவோலை அல்லது கேட்பு வரைவோலையாக செலுத்த வேண்டும்.

7. ஒவ்வொரு இனத்திற்கும் துல்லியமாக தொகை குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளியின் மேல் உறையில் ஒப்பந்த நிறுவனத்தின் முழுவிலாசம் குறிப்பிட வேண்டும்.

9. ஒப்பந்தப்புள்ளி படிவம் திருக்கோயில் அலுவலகத்தில் ரூ. 50/– செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

10. ஒப்பந்தப்படிவம் 13.05.2022 முதல் 26.05.2022 அன்று பிற்பகல் 2.00 மணி வரை திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

11. பசுந்தீவனங்கள் நல்ல சுகாதாரமான முறையில் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப சப்ளை செய்ய வேண்டும்.

12. ஆண்டு முழுவதும் தோராயமாக சப்ளை செய்ய வேண்டிய அளவு தேவைக்கேற்ப கூட்டவோ குறைக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

13. தினந்தோறும் சப்ளை செய்ய வேண்டிய பசுந்தீவனங்களின் அளவுகளை முதல் நாள் மாலை திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளி வழங்கும் ஒப்பந்ததாரர்கள் உரிய ஒப்பந்தப்புள்ளி முன்வைப்பு தொகை செலுத்திய ரசீது இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட வேண்டும்.

15. குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு வரப்படும் ஒப்பந்தப்புள்ளி, கையொப்பம் இடப்படாத ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.

16. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் உறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் முன்வைப்புத் தொகையை தவிர மற்ற ஒப்பந்ததாரர்கள் தொகை ஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் வங்கி காசோலை மூலம் திருப்பித்தரப்படும். உறுதி செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் முன்வைப்பு தொகை ஒப்பந்தப்புள்ளி காலம் முடிவு பெற்று தணிக்கை முடிந்த பின்பு தான் திரும்ப வழங்கப்படும்.

17. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ந.க.எண். 765/2017/இசட் 1/ நாள் 17.03.2017–ன் குறிப்பில் அறிவுறுத்தப்பட்ட ஆலோசனைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் பின்பற்ற வேண்டும்.

18. பொதுஏலத்தில்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் தங்களது ஆதார், பான் கார்டு மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் வழங்க வேண்டும்.

19. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அரசு விடுமுறை அல்லாத நாட்களில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

திருமதி. செ.வ.ஹர்சினி,பி.எஸ்.சி,பி.எல்.,
தக்கார்/துணை ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
மருதமலை

திருமதி. கா.விமலா, எம்.ஏ,பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்
Website: hrce.tn.gov.in
Email : aceocbe_9760.hrce@tn.gov.in
தொலைபேசி எண் : 0422–2607991

இடம் : பேரூர்
நாள் : 12.05.2022